

சைதை தொகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபாதை வியாபாரிகளுக்கு குடை மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி சைதாப்பேட்டை அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில், சைதை தொகுதிக்குட்பட்ட 700 நடைபாதை வியாபாரிகள் கலந்து கொண்டு குடை மற்றும் ஊக்கத்தொகை பெற்று பயனடைந்தார்கள். மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி செயலாளர்கள் துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், வட்ட செயலாளர்கள் ந.தமிழரசு, நாகா, எஸ்.பி. கோதண்டம், சை.மு.சேகர், அட்கோ கமலநாதன், க.மணி, நேருநகர் பாட்சா, ஆரோக்யராஜ், வரதன், முருகன், மாவட்ட அமைப்பாளர் நா.மணிகண்டன், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

### முதல்வரின் அயராத உழைப்பு, தொலைநோக்குப் பார்வை, கடுமையான அர்ப்பணிப்பால்

# இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய முதல் மாநிலமாக தமிழ்நாடு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன.4–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அயராத உழைப்பு, தொலைநோக்குப் பார்வை, கடுமையான அர்ப்பணிப்பால் இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய முதல் மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்திருப்பதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

இந்தியாவில், உத்தரப்பிரதேசம் மாநிலத்தைவிட பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்கு வதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. உத்தரப்பிரதேசத்தின் கடன் தொகையைவிட தமிழ்நாட்டின் கடன் தொகை அதிகமாக இருப்பதாக ஒரு தரப்பினர் முன்வைக்கும் வாதம் ஏற்புடையது அல்ல என புள்ளி விவரங்கள் கூறுகின்றன.



தினகரன்

ஜனவரி 3, 2026 சனிக்கிழமை

அனைத்திலும் நம்பர் 1

இந்தியாவில், உத்தரபிரதேசம் மாநிலத்தை விட பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. உத்தரபிரதேசத்தின் கடன் தொகையை விட தமிழ்நாட்டின் கடன் தொகை அதிகமாக இருப்பதாக ஒரு தரப்பினர் முன்வைக்கும் வாதம் ஏற்புடையது அல்ல என புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

ஒரு மாநிலத்தின் கடனை, வெறும் தொகையின் அடிப்படையில் கணக்கிடாமல், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிட்டு கணக்கிட வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். 2025-26ம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடன், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 26.1% ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவே, 2024-25 நிதியாண்டில் 26.4% ஆகவும், 2023-24 நிதியாண்டில் 26.6% ஆகவும் இருந்துள்ளது. இந்த தரவுகள் தமிழ்நாட்டின் கடன் விகிதம், கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகு படிப்படியாக குறைந்து வருவதை உணர்த்துகின்றன.

ஒரு மாநிலத்தின் கடனை, வெறும் தொகையின் அடிப்படையில் கணக்கிடாமல், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிட்டு கணக்கிட வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். 2025–26ம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடன், மாநிலத்தின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 26.1% ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவே, 2024–25 நிதியாண்டில் 26.4% ஆகவும், 2023–24 நிதியாண்டில் 26.6% ஆகவும் இருந்துள்ளது.

இந்த தரவுகள் தமிழ்நாட்டின் கடன் விகிதம், கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகு படிப்படியாக குறைந்து வருவதை உணர்த்துகின்றன. ஆனால், உத்தரப்பிரதேசத்தின் ஒட்டு மொத்த கடன், அம்மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29.4% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.35.7 லட்சம் கோடி ஆக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டைவிட மூன்று மடங்கு அதிக மக்கள் தொகையை கொண்ட உத்தரப்பிரதேசத்தின் உள்நாட்டு உற்பத்தி ரூ.30.8 லட்சம் கோடி ஆக மட்டுமே உள்ளது.

இந்த விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால், உத்தரப்பிரதேசத்தின் கடன் விகிதம் தமிழ்நாட்டின் கடன் விகிதத்தைவிட அதிகம். தமிழ்நாட்டின் நிதிப்பற்றாக்குறை, கடந்த நிதியாண்டைவிட குறைந்து, 2025–26ம் நிதியாண்டில் 3% ஆக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். நடப்பு நிதியாண்டில் 11.19% வளர்ச்சியை எட்டி, இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய முதல் மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் சராசரி உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7% ஆக இருந்துள்ளது. கடன் அதிகரித்தாலும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடனில் மூழ்காமல் விரிவடைந்துள்ளது. இது, தரவுகளின் மூலம் உறுதியாகிறது. உத்தரப்பிரதேசத்தின் தனிநபர் சராசரி உற்பத்தி மதிப்பு ரூ.1.07 லட்சம் ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டின் மதிப்பு மூன்று மடங்கு அதிகரித்து ரூ.3.53 லட்சம் ஆக உள்ளது.

தமிழ்நாட்டைவிட குறைவாக கடன் பெற்றிருப்பதாக கூறப்படும் உத்தரப்பிரதேசம், பொருளாதார வளர்ச்சி குறியீடுகளில் தமிழ்நாட்டைவிட மிகவும் பின்தங்கி யிருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. தமிழ்நாடு உலகத்தர கட்டமைப்பு, தொழில் வளர்ச்சிக்கென அடுத்தகட்ட வளர்ச்சிக்காக பெறும் கடனைவிட, அதிக தொகையை உத்தரபிர தேசம் அடிப்படை வசதிகளுக்காக பெற்று வருகிறது. அதாவது, தமிழ்நாடு தனது கடனை உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சிக்காக பயன்படுத்தும் வேளையில், உத்தரப்பிரதேசம் மாநிலம் இன்னும் அடிப்படை வசதிகளுக்காகவே கடன் பெறும் நிலையில் உள்ளது.

அனைத்து குறியீடுகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்வதை பொருளாதார புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இது, பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வர்களை புருவம் உயர்த்த வைத்துள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் அயராத உழைப்பு, தொலைநோக்கு பார்வை, தெளிவான முடிவு, கடுமையான அர்ப்பணிப்பு போன்றவை தமிழ்நாட்டை இன்னும் முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்லும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. வெல்க, தமிழ்நாடு.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் திம்மராஜாம்பேட்டை ஊராட்சியில்.என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி. கூட்டத்தில். சட்டமன்ற தொகுதி. பார்வையாளர் திருமதி. ராணி ரவிச்சந்திரன் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்.உடன். ஒன்றிய செயலாளர். பி. சேகர் மாவட்ட நெசவாளர் அணி.அ.கணேசன் தகவல் தொழில்நுட்ப அணி. எஸ் அண்ணாதுரை. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர். வி குமரன். ஒன்றிய நிர்வாகிகள். விக்டர் செல்வகுமார். லோ. ரமேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்




திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடம்பத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்பரை கூட்டம் விடையூர் ஊராட்சி பாக என் 121.122.160. ஆகிய பகுதியில் ஒன்றிய பொறுப்பாளர் பிரகாஷ் ஞான ஒளி தலைமையில் நடைபெற்றது இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.இராஜேந்திரன், கழக அரசின் சாதனையை குறித்து பொதுமக்களிடம் பேசினார். உடன் கே.திராவிட பக்தன்,க. அரிகிருஷ்ணன், குருதாஸ், சேகர், பெருமாள், குமரேசன்,வாசு, மோகனசுந்தரம், கோபிநாத், ஜெகதா மந்தவெளியான், வேளாங்கண்ணி, சுந்தரம், பஞ்சாட்சரம், சுந்தரமூர்த்தி,குப்பன்,பூங்காவனம், தனலட்சுமி, மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் பி.எல்.எ, 2, பி.எல்.சி. உள்பட பலர் உள்ளனர்



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (3.1.2026 பெருநகர சென்னை மாநகராட்சி இராயபுரம் 5வது மண்டல அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்தும், தற்போதைய பணிகளின் நிலை குறித்தும் மற்றும் முடியும் தருவாயில் உள்ள பணிகளை விரைவில் திறப்பது குறித்தும் அனைத்து துறை அலுவலர்களுட ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திராவிட பொங்கல் – சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய - நகர - பகுதி அளவில் விளையாட்டுப் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் 31.12.2025 அன்று உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஒன்றிய, ஒருங்கிணைந்த நகரம், ஒருங்கிணைந்த பகுதி (மண்டல) அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி 09.01.2026 வரை நடைபெறும்.

கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும், www.dravidapongal.in, <http://www.dravidapongal.in> என்ற இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டும்.

09.01.2026 தேதிக்குள் அனைத்து போட்டிகளும் முடித்து, முதல் இரண்டு இடங்களை பிடித்த அணிகளை மாவட்ட அளவில் போட்டியில் விளையாடுவதற்கு பரிந்துரைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கழக மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் ஒன்றிய பகுதி பேரூர் அளவில் வெற்றி பெற்ற அணிகளை கொண்டு கழக மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஜனவரி 10ஆம் தேதி தொடங்கி 13 வரை நடத்தி பரிசுகளை வழங்குவதெனவும்

மாவட்ட அளவிலான போட்டிகள் மாவட்ட அளவில் வெற்றி பெறும் அணிகளை கொண்டு பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது.

ஜனவரி 14 15 ஆம் தேதி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் ஊராட்சிகள் கிளைகள் வார்டுகள் அளவில் மகளிர்களை திரட்டி, திராவிட பொங்கல் வைத்து கொண்டாடப்பட வேண்டும் அனைத்து வீடுகளிலும் முன்பு சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்

என எழுதி திராவிட பொங்கல் கோலமிட்டு பெண்கள் குழந்தைகளுக்கான கோலப்போட்டிகள் உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும் என அன்புடன் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| ஒன்றிய/ நகர/ பகுதி/ பேரூர் | ஆண்கள் போட்டிகள் | பெண்கள் போட்டிகள் |
|---|---|---|
| காஞ்சிபுரம் வடக்கு | கபடி, கைப்பந்து | டென்னிகாய்ட், கோகோ |
| காஞ்சிபுரம் தெற்கு | கிரிக்கெட் | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் |
| வாலாஜாபாத் வடக்கு | கபடி | டென்னிகாய்ட் |
| வாலாஜாபாத் தெற்கு | கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் |
| வாலாஜாபாத் பேரூர் | கிரிக்கெட் | கோகோ |
| சாலவக்கம் ஒன்றியம் | கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் |
| உத்திரமேரூர் ஒன்றியம் | கிரிக்கெட் | கோகோ |
| உத்திரமேரூர் பேரூர் | கபடி | டென்னிகாய்ட் |
| மதுராந்தகம் வடக்கு | கிரிக்கெட் | கோகோ |
| மதுராந்தகம் தெற்கு | கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் |
| மதுராந்தகம் நகரம் | கிரிக்கெட், கபடி, கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், கைப்பந்து, கோகோ. |
| அச்சரபக்கம் வடக்கு | கிரிக்கெட் | கோகோ |
| அச்சரபக்கம் மத்தியம் | கபடி | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் |
| அச்சிரபக்கம் தெற்கு | கைப்பந்து | டென்னிகாய்ட் |
| கருங்குழி பேரூர் | கபடி | டென்னிகாய்ட் |
| இலத்தூர் வடக்கு | கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் |
| இலத்தூர் தெற்கு | கிரிக்கெட் | டென்னிகாய்ட் |
| திருக்கழுக்குன்றம் தெற்கு | கபடி | கோகோ |
| சித்தமூர் மேற்கு | கபடி | டென்னிகாய்ட் |
| சித்தமூர் கிழக்கு | கிரிக்கெட் | கோகோ |
| இடைகழிநாடு பேரூர் | கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் |
| பகுதி 1 | கிரிக்கெட், கபடி, கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், கைப்பந்து, கோகோ. |
| பகுதி 2 | கிரிக்கெட், கபடி, கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், கைப்பந்து, கோகோ. |
| பகுதி 3 | கிரிக்கெட், கபடி, கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், கைப்பந்து, கோகோ. |
| பகுதி 4 | கிரிக்கெட், கபடி, கைப்பந்து | 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், கைப்பந்து, கோகோ. |

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் சிறப்பு வாக்காளர் சேர்ப்பு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை சென்னை மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. ஆய்வு செய்தார். பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை உள்ளிட்ட கழகத்தினர் உடன் உள்ளனர்.